THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

## அக்டோபர் 2004

ஆசிரியர்
B.அர்ஜுனன்

மரம் 4 ஆண்டு சந்தா ரூ.50/- கனி 11

கிறிஸ்துவின் வசன மாத இதழின் பதினாறாவது வாசகர் கருத்தரங்கு

*வாசகர்களுக்கு,*

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தநாமத்தில் வாழ்த்துக்கள். இக்கருத்தரங்கிற்கு திருநெல்வேலி மற்றும் அண்டை மாவட்டத்து வாசகர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். அனுமதி இலவசம்.

**நோக்கம் :** ★ 1992முதல்2003 வரை வெளிவந்த இதழைக் குறித்த ஓர் ஆய்வு

★பதினாறாவது கருத்தரங்கில் தாங்கள் கொடுக்கும் ஆலோசனை

★ எதிர் காலத்தில் நமது இதழின் இலக்கு

**நாள் : அக்டோபர் 30 - ம் தேதி சனிக்கிழமை, காலை 10.00 மணி**

**இடம் : R.ஜான்சன் அந்தோணிராஜ், தீயணைப்பு அலுவலர் குடியிருப்பு**

**அம்பாசமுத்திரம் P.O திருநெல்வேலி DT.**

மேலும் விபரமறிய

The Word of Christ

954543-263278

*கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்*

**R.ஜான்சன் அந்தோணிராஜ்**

***வாருங்கள்! பங்குபெறுங்கள்!! அறிந்து கொள்ளுங்கள்!!!***

- இரட்சிப்பின் விஷயத்தில்
  - கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!
- கோட்ப்பாட்டின் விஷயத்தில்
  - கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!
- ஐக்கியத்தின் விஷயத்தில்
  - கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!
- அதிகாரத்தின் விஷயத்தில்
  - கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!
- ஆராதனை விஷயத்தில்
  - கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!
- சபையின் விஷயத்தில்
  - கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!
- நித்தியத்தின் விஷயத்தில்
  - கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!



## ஆன்மீக ஆலோசனை

*"ஒருவனையும் தூஷியாமலும், சண்டை பண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தைக் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டு"*

*(தீத்து3:2)*

"Go ye into all the world, and preach the gospel to every creature"

Mark 16:15

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.


# திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
# THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் _ 4 அக்டோபர் 2004 கனி _ 11


ஆசிரியருரை

## இயேசு கிறிஸ்து மாறாதவராயிருக்கிறார்
## Jesus Christ the Same




மாறிவரும் உலகத்தில் என்றுமே மாறாத ஒரு இரட்சகர் இருக்கிறார் என்றால் அது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவாகத்தான் இருக்க முடியும். அவர் ஆதியும் அந்தமுமாயிருக்கிறார். அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும். "இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" (எபி.13:8).

சிலருடைய கேள்வி: இயேசுவானவர் தோன்றி இரண்டாயிரம் வருடங்கள்தான் ஆகிறது, அதற்கு முன்பு இருந்தாரா?. ஆம், இருந்தார். எப்படியென்றால், "அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" (யோவா.1:2,3) என்று அப்போஸ்தலனாகிய யோவான் எழுதி தெளிவுபடுத்துகிறார். இயேசுகிறிஸ்து நேற்றும் சரி இன்றும் சரி என்றும் சரி அவர் மாறாதவராகவேயிருக்கிறார். அப்படியென்றால் அவருடைய செயல்பாடுகள் என்றுமே மாறாதவையாக இருக்கின்றது. **அவர் அதிசயமானவர், ஆலோசனை கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு.** "பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும்

செய்யாதிருப்பாரோ? அவர் வசனித்தும் நிறைவேற்றா திருப்பாரா?" (எண்.23:19) என திருமறை விளக்குகிறது. என்றுமே மாறாத அவரை, இன்று இருந்து நாளை வாடிப்போகும் பூவிற்கு ஒப்பான மனுஷனுக்கு ஒப்பிடலாகாது. மனிதன், "கொடுப்பேன் என்று சொல்லியும் கொடாமலிருக்கிற வஞ்சகன் மழையில்லாத மேகங்களுக்கும் காற்றுக்கும் சரி" (நீதி.25:14). ஆனால், வாக்குதத்தம் செய்த கர்த்தர் உண்மையுள்ளவராயிருக்கிறார்.

"கர்த்தவே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப் படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளா யிருக்கிறது; அவைகள் அழிந்துபோம்; நீரோ நிலைத்திருப்பீர்; அவைகளெல்லாம் வஸ்திரம்போலப் பழைமையாய்ப்போம்; ஒரு சால்வையைப்போல அவைகளைச் சுருட்டுவீர், அப்பொழுது மாறிப்போம்; நீரோ மாறாதவரா யிருக்கிறீர், உம்முடைய ஆண்டுகள் முடிந்து போவதில்லை" (எபி.1:10-12). ஆம், அவருடைய ஆண்டுகள் முடிந்து போவதில்லை. "இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாயிருக்கிறார்" (வெளி.1:4)

"அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மாற்.10:45) என வாசிக்கிறோம். பவுல் தன்னுடைய பிரசங்கத்தில் குறிப்பிடும் போது "தாவீதுடைய சந்ததியிலே தேவன் தமது வாக்குத்தத்தின்படியே இஸ்ரவேலுக்கு இரட்சகராக இயேசுவை எழும்பப்பண்ணினார். இவர் வெளிப்படுவதற்கு முன்னே மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்து யோவான் இஸ்ரவேலர் யாவருக்கும் பிரசங்கித்தான். யோவான் தன் பணிவிடை ஓட்டத்தை நிறைவேற்றுகிறபோது; நீங்கள் என்னை யார் என்று நினைக்கிறீர்கள், நான் அவர் அல்ல, இதோ, எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சையை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல என்றான்" (அப்.13:23-25). பவுல் இங்கு யோவான் சொன்னதை நமக்குத் தெளிவுபடுத்திக் காட்டுகிறார்.

இச்செய்தியை வாசிக்கிற உங்களுக்கு நாங்கள் சொல்லுகிறதென்னவென்றால், "கிறிஸ்து உங்களில் வாசமா யிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள், கிறிஸ்துவின் ஆவியில் லாதவன் அவருடையவனல்ல. மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும்,

ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்" (ரோம.8:10,11). பவுல் கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல என்கிறார். பரிசுத்த ஆவியைப் பற்றி பேசுகிறவர்கள் இவ்வசனத்தை விட்டுவிடுகிறார்கள். இவர்களைப் பற்றி யோவான் அப்போஸ்தலன் "மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திகிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது" (யோவா.4:3) என்று எழுதுகிறார். மாறாதவருடைய இரட்சிப்பு வேண்டுமென்றால் நாமும் மாறாதிருக்க வேண்டியது அவசியம். இன்று பரிசுத்தஆவியை பெற்றுக் கொண்டிருக்கிறீர்களா? என்று கேட்கும் கூட்டத்தைப் பார்த்து இருப்பீர்கள். ஆவியை கொடுப்பதற்கும் அதை எடுப்பதற்கும் கர்த்தர் ஒருவருக்கே அதிகாரம் இருக்கிறது. காத்திருப்பதினாலோ அல்லது ஒரு பெரிய ஊழியர் கைகளை வைப்பதினாலோ பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்ள முடியாது. மாறாக வசனம் மிக தெளிவாக சொல்லுகிறது, "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக்கேட்டு, விசுவாசிகளான போது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்திரத்தின் அச்சாரமாயிருக்கிறார்" (எபே.1:13,14). இந்த விஷயத்தில் தேவன் பட்சபாதமுள்ளவரல்ல.

மாறாத அவரை ஏற்றுக்கொள்ளும்போது இரட்சிப்பு வீடுதேடி வருகிறது. சகேயுவின் சம்பவத்தில் அவன் இயேசுவைப் பார்க்க வகைதேடினான். "இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே. இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்" (லூக்.19:9,10). இன்று முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை தேடுங்கள் என்றால். அவர்கள் சொல்லுகிற பதில்: முதலாவது கர்த்தர் எங்களுக்கு நன்மை செய்யட்டும் பின்பு அவரையும் அவருடைய ராஜ்யத்தையும் தேடுகிறோம் என்பார்கள். ஆதாமை உண்டாக்கின தேவன் அவனுக்கு எல்லாவற்றையுங் கொடுத்து, சகலத்தையும் ஆண்டுகொள்ளுங்கள் என்றார். இன்னும் என்னதான் அவர் கொடுக்கவேண்டும்? மனிதனுக்கு சாகும் வரை ஏதாவது ஒன்று

தேவைப்பட்டுக்கொண்டே தான் இருக்கும். அதையே நினைத்து ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாதிருக்கும்போது கர்த்தருடைய ஆசீர்வாதத்தை இழக்க நேரிடும். சகேயுவைப்போல இயேசுவை நோக்கிப் பாருங்கள். "இதோ,வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" (வெளி.3:20). நீங்கள் முதலாவது அவருக்குச் செவிகொடுங்கள். அப்பொழுது அவர் உங்களுக்குச் செவிகொடுப்பார்.

இரட்சிப்பு கர்த்தருடையது. இன்று நீங்கள் அவரை விசுவாசிப்பீர்கள் என்றால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள். காலம் தாழ்த்தாது உடனே அவருடைய வசனத்திற்குக் கீழ்ப்படியுங்கள். "தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு, உடன் வேலையாட்களாகிய நாங்கள் உங்களுக்குப் புத்தி சொல்லுகிறோம். அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச் செவிகொடுத்து, இரட்சணியநாளிலே உனக்கு உதவிசெய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணியநாள்" (2கொரி.6:1,2). இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் தம்முடைய சபையிலே சேர்த்து வருகிறார். இன்றே இரட்சணியநாள், கீழ்ப்படிந்து கிறிஸ்துவினுடைய மந்தையில் சேர்க்கப்படுங்கள்.

இயேசுகிறிஸ்து மெல்கிசேதேக்கின் முறைமையின்படியே என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறார். பிரதான ஆசாரியருடைய பணி தன்னுடைய பாவங்களுக்காகவும், ஜனங்களுடைய பாவங்களுக்காவும் பலியிடவேண்டியது. மேலும், "அவர்கள் மரணத்தினிமித்தம் நிலைத்திருக்கக் கூடாதவர்களானபடியால், ஆசாரியராக்கப்படுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள்" (எபி.7:23). ஆனால் கிறிஸ்துவோ "என்றைன்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே, மாறிப் போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார். **மேலும் தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றும் முடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்.** பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்" (எபி.7:24-26). நேற்றும் இன்றும்

என்றும் மாறாதவராகிய இயேசுகிறிஸ்து மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார். அது மட்டுமல்ல தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர் களுக்காக வேண்டுதல் செய்யக் கூடியவராயுமிருக்கிறார். அவர் உயிரோடிருக்கிற வராகையால் அவரைப் பற்றிக் கொள்ளு கிறவர்களும் உயிரோடிருப்பார்கள். மேலும் "பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ் செய்கிற வருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு" (எபி.8:2). நீங்கள் யார் மூலமாக தேவனிடத்தில் சேர்க்கப்பட்டுள்ளீர்கள்? யாரால் ஸ்தாபிக்கப்பட்ட சபையில் அங்கமாயிருக்கிறீர்கள்? மேற்கண்ட வசனத்தின்படி அவர் மூலமாய் தேவனிடத்திலும், கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட அவருடைய திருச்சபையிலும் இருக்கவேண்டும். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவா.14:6) என்கிறார்.

## பொது அறிவுச் சோதனை

1. சிவப்பு கோள் என்பது எது?
   அ)செவ்வாய் ஆ)வியாழன் இ)நெப்டியூன்
2. இரத்தத்தில் உள்ள கழிவுப் பொருட்களை நீக்குவது எது?
   அ)இதயம் ஆ)சிறுநீரகம் இ)கல்லீரல்
3. கடல் நீரின் இறக்கம் ஏற்றம் ஒரு நாளுக்கு இருமுறை ஏற்படக் காரணம் என்ன?
   அ)பூமி சூரியனை சுற்றுவதால் ஆ)நட்சத்திரங்கள் தன்னைத்தானே சுற்றுவதால் இ)பூமி தன்னைத்தானே சுற்றுவதால்
4. இந்திய இலக்கியத்திற்கு வழங்கப்படும் உயர்ந்த விருது?
   அ)ஞானபீட விருது ஆ)அர்ச்சுனா விருது இ)பாரத ரத்னா விருது
5. கல்பாக்கத்தில் உள்ள அணுமின் நிலையத்திற்கு யாருடைய பெயர் சூட்டப்பட்டுள்ளது?
   அ)வ.உ.சிதம்பரனார் ஆ)இந்திராகாந்தி இ)எம்.ஜி.ஆர்

விடைகள்:1.செவ்வாய் 2.சிறுநீரகம் 3.பூமி தன்னைத்தானே சுற்றுவதால் 4.ஞானபீட விருது 5.இந்திராகாந்தி

# நாம் கிறிஸ்தவர்களாய் மாறாதிருந்தோமானால் நாம் எங்கேயிருப்போம்?

## Where Would Be If We Had Not Become Christians

**J.C.Choate**



நாம் கிறிஸ்தவர்களாகவும் கர்த்தருடைய சபை அங்கத்தினர்களாகவும் மாறாதிருந்தோமானால் நாம் எங்கேயிருப்போம் என நீங்கள் எப்போதாவது அறிய ஆவலுடனிருந்திருக்கிறீர்களா? நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படியாதிருந்தோமானால், அவர் நம்முடைய ஜீவியத்தை மாற்ற அனுமதிக்காதிருந்தோமானால், இன்று நாம் யாராக இருப்போம்? நாம் எங்கேயிருப்போம்? நாம் என்ன செய்து கொண்டிருப்போம்? நாம் ஜீவிக்கிறவர்களாய் இருப்போமா?

அப்போஸ்தலர்களையும் வேதவாக்கியங்களில் நன்கு அறியப்பட்டுள்ள மற்ற புருஷரையும் ஸ்திரீகளையும் பாருங்கள்: தேவனுடைய பெரிய ஊழியர்களாய் மாறினவர்களையும், காலகாலமாக கீர்த்திபெற்றவர்களையும் பாருங்கள், ஏனென்றால் அவர்களுடைய சரித்திரங்கள் தேவனுடைய புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளன. அவர்கள் தங்களுடைய ஜீவியங்களை கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடாதிருந்திருப்பார்களேயானால் அவர்களுக்கு என்ன நிகழ்ந்திருக்கும்?

உதாரணமாக, மனிதவர்க்கத்தின் மிகப்பெரிய வரலாற்றில், கர்த்தரில்லாமல் ஏழ்மையான மீனவன் பேதுரு என்னத்தைப் பெற்றிருந்திருப்பான்?

சவுல் மனந்திரும்பாமலிருந்திருப்பானேயானால், அவன் முடிவு என்னவாயிருந்திருக்கும்?

முதலாவது கர்த்தருக்கு கீழ்ப்படிந்ததால் மட்டும் பெரிய மாற்றத்தைக்கொண்டு வரவில்லை, மாறாக விசுவாசம் மிகமுக்கியமானதாயிருந்தது. சிலர் தங்கள் ஜீவியத்தில் விழுந்துபோனார்கள் என்பதை எண்ணிப்பாருங்கள். யூதாஸ் ஒரு பிரதான எடுத்துக்காட்டு. மற்ற அப்போஸ்தலர்களுடன்

அவனுடைய முடிவை ஒப்பிட்டுப் பார்க்கையில் அவனுடைய விசுவாசம் எப்பேர்பட்ட வித்தியாசத்தை உருவாக்கினது! அப்புறம் அனனியா, சப்பீராளுடைய சம்பவமும் உண்டு, அவர்களுடைய பொய்யினிமித்தம் பரிசுத்த ஆவியினால் எப்படி அடிக்கப்பட்டு அவர்கள் மரண மடைந்தனர்! பழையஏற்பாட்டில் நாதாபு மற்றும் அபியு பற்றிய காரியம் என்னவாயிற்று? மேலும், மாபெரும் பார்வோன் கூட தேவனுக்கு எதிர்த்து நின்றதால் தோற்றுப்போனான், மற்றும் ஏரோது ஜனங்களுக்குப் பிரசங்கித்தபோது, ஜனங்கள் இது மனுஷசத்தமல்ல, இது தேவ சத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள். அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் கர்த்தருடைய தூதனால் அடிக்கப்பட்டு இறந்தான்.

நாம் கர்த்தருடைய சித்தத்திற்கு ஏற்ப இசைந்து போகாதிருந்தோமானால், நாம் இழந்து போனவர்களாக மட்டுமல்ல, மாறாக நாம் சில சாதாரணவேலைய்ின் அடியில் தங்கிவிடுவதிலே அதாவது , திருமணம் செய்திருக்கவும், விவாகரத்து பண்ணவும், மீண்டும் மறுமணம் செய்யவும், குடிகாரனாக மாறுகின்றவனாகவும், ஒரு போதைக்கு அடிமையானவனாகவும், சாபத்தின் பழக்கத்தில் வளர்ந்தவனாகவும், எல்லாவிதமான பிரச்சனைகளில் அகப்பட்டவனாகவும் மாறி அதிலே திருப்தியடைந்த வர்களாயிருக்கலாம்.

நாம் இப்பேர்பட்ட வழிகளில் சென்றிராதவர் களாயிருந்தாலும் கூட, நாம் இறுதியில் ஒன்றையும் பெற்றிராதவர்களாகவே நிலைத்திருப்போம், நம்முடைய வாழ்வு சாதகமான எந்த மாற்றத்தையும் இவ்வுலகில் உருவாக்கியிருக்காது. மற்றபடி நாம் வெறுமனே வாழ்ந்து, மரித்து, இறுதியாக மொத்தத்தில் நித்தியஜீவனை இழந்தவர்களாகவே இருந்திருப்போம். இது பயங்கார மானதல்லவா?

ஆனால் நாம் ஒரு கிறிஸ்தவனாக மாறி இருந்தாலும்கூட, விசுவாசமில்லாதவர்களாய் இருந்தோமானால், நம்முடைய ஆத்துமாவை இழந்தவர்களாக; உலகத்தினுள் மீண்டும் சென்று, பாவம் நிறைந்த, ஏமாற்று வாழ்க்கை வாழ்கின்றவர்களாக, ஒருவேளை சில தவறான சமயக் குழுவில் இணைந்தவர்களாக, கர்த்தருடைய வழிக்கு விரோதமாக வாழ்கின்றவர்களாக போய்விடுவோம். இப்படிப்பட்ட காரிங்களை நினைப்பதற்குக் கூட பயமாகயிருக்கின்றது.

தேவனுடைய பிள்ளையாக நாம் மாறும்போது

எப்பேர்பட்ட வேறுபாடு! பல கிறிஸ்தவர்கள் தொடர்ந்து வெற்றியுள்ளவர்களாகவும் பிரசித்திபெற்றவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் வியாபாரத்தில் வெற்றியடைகின்றனர், தங்களுடைய சமுதாயத்தில் தலைவர்களாக மாறுகின்றனர், உயர்வான கல்வியறிவு பெற்றவர்களாகவும், கல்லூரி, பல்கலைகழகங்களின் தலைவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் கிறிஸ்தவர்களாக, இருக்கின்றதாலும், கிறிஸ்தவ கோட்பாடுகளின்படி வாழ்கின்றதாலும் எண்ணிலடங்காத மற்ற பகுதிகள் மாபெரும் வெற்றியினையும், வளர்ச்சியினையும் காணுகின்றது.

எப்படியோ, கிறிஸ்தவர்கள் வாழ்க்கையில் எவ்வாறு இந்த நிலைமையை அடைந்தார்கள் என அறியாது அடிக்கடி கண்சொருகிப்போன சுபாவமுடையவர்களாக இருப்பதே பிரச்சனையாக இருக்கிறது. அவர்கள் முழு ஆசீர்வாதங்களும் தங்களாலே வந்ததைப் போல நினைத்து, "பாருங்கள் நான் என்னமாய் இதைச் செய்திருக்கிறேன், இதை நிறைவேற்றி முடிக்க எத்தகைய திறன் கொண்டிருக்கிறேன்!" என சொல்லுகிறார்கள். உலகத்தில் அதிகமான ஜனங்கள் வெற்றி பெறுகின்றனர், ஆனால் ஒரு கிறிஸ்தவனாக மாறியிருக்கிறவன் தன்னுடைய வாழ்வில் கிறிஸ்தவ கோட்பாடுகளை செயல்படுத்தும்போதும் சத்தியத்தோடும், நீதியோடும் சம்பந்தப்படாதவைகளைப் பழக்குவிப்பதிலிருந்து விலகி இருக்கும் போதும் இதைப்போல் வெகு அதிகமான வெற்றிகளைப் பெற்றுக்கொள்ளுகிறான்.

ஒருவன் கிறிஸ்தவனாக மாறுகின்ற போது, அவன் தன் ஜீவியத்தை மாற்றுகிறான். உலகை வித்தியாசமான முறையில் காண்கின்றான். அவன் கிறிஸ்துவையும், பின்பற்றும்படிக்கு கிறிஸ்தவக் கோட்பாடுகளையும், அடையும்படிக்கு இலக்கையும் பெற்றிருக்கிறான். அவன் ஒரு கடின உழைப்பாளி, தன்னுடன் வேலை செய்கிறவர்களிடத்தில் மரியாதையையும் பெற்றிருக்கிறான், மற்றவர்களோடு நடந்து கொள்ளுவதில் நேர்மையுடனிருக்கிறான், தன்னால் இயன்ற மட்டும் தன்னுடைய வேலையை சிறப்பாக செய்ய முயற்சிக்கிறான். அவன் தனக்கு உதவிசெய்து, வெற்றியடைய தன்னை ஊக்கப்படுத்தும் கிறிஸ்தவர்களோடு ஐக்கியம் கொண்டிருக்கிறான். அவனுடைய சரீர ஜீவியமும், அவனுடைய குடும்ப அங்கத்தினர்களின் ஜீவியமும் மாற்றமடைந்திருக்கிறது. அவர்கள் சாப்பிடுகிற, குடிக்கிற பொருட்களினாலும் அல்லது தங்களுடைய ஜீவியத்தினாலும்

அவர்கள் தங்களுடைய சரீரங்களை தகாத விதமாக பயன்படுத்துவதில்லை, எனவே அவர்கள் வழக்கமாக நல்ல உடல்நலம் பெற்றிருக்கின்றனர். அவர்கள் தங்களுடைய பணத்தை நன்றாக குடிப்பதற்கும், சூதாடுவதற்கும், கெட்டபழக்க வழக்கங்களுக்கும் வீணாக்காதபடியினால் கல்விக்காகவும், வியாபாரத்திற்காகவும், மற்ற தகுதியான நல்ல காரியங்களுக்காகவும் செலவு செய்கின்றனர்.

எனவே நம்முடைய ஜீவியத்தையும் எதிர்காலத்தையும் இவ்வுலகில் மாற்றுகின்ற கிறிஸ்தவத்தை பெற்றிராதிருந்தோமானால் நாம் எங்கேயிருப்போம், மேலும் நம்முடைய நித்தியத்தை எங்கே கழிப்போம்?

ஜீவனுக்காகவும் மரணத்திற்காகவும் நீங்கள் ஏதேனும் பெற்றிருக்கிறீர்களா? நான் நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக இருக்கும்படிக்கு ஊக்கப்படுதுகிறேன். கிறிஸ்தவம், உங்கள் ஜீவியத்தை ஒரு நித்திய வெற்றியுள்ள ஜீவியமாக மாற்றட்டும்.

---

சிறுவர் பகுதி

# வேஷம்

*வேதபகுதி: 2கொரிந்தியர்11:13-15*



வேஷம் போடுகிறவர்களைப் பார்த்து இருப்பீர்கள். அவர்கள் நடிப்பிற்காக வேஷம் போடுவார்கள். ஏமாற்றுகிறவர்கள் சத்தியத்திற்கு விரோதமாக வேஷம் போடுவார்கள். அவர்களைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். நான் ஏன் இதை உங்களுக்கு சொல்லுகிறேன் என்றால் அப்படிப்பட்டவர்களிடமிருந்து உங்களை பாதுகாக்கவே! கோழி எப்படி தன் குஞ்சுகளை பருந்துவிடமிருந்து பாதுகாக்க; பருந்து வரும்போது கூவி அழைத்து குஞ்சுகளை தன் சிறகுகளுக்குள் வைத்துக் கொள்ளுகிறதோ, அதைப்போல எதிராளிகளைக் குறித்து நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

முதலாவது நமக்கு எதிராளி யார் தெரியுமா? ஓ தெரியும் சார். என்று சொல்லுவீர்கள். யார் என்றால் பள்ளிக்கூடத்தில்.

படிக்கிற மாயாண்டி என்பீர்கள். அவனல்ல. நான் சொல்லவருவது சாத்தானை. அவன்தான் நமக்கு எதிராளி. ஏன் அவன் நமக்கு எதிராளி என்றால், அவன் ஆதிமுதல் பாவம் செய்கிறான். தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிராக செயல்படுகிறான். அவன் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வான் என்று வேதம் கூறுகிறது. அது ஆச்சரியமல்ல, சாத்தான் சாமர்த்தியசாலியாக இருக்கிறான். அதுமட்டுமல்ல அவனைச்சார்ந்த அவனுடைய ஊழியர்கள் இருக்கிறார்களே, அவர்களும் நீதியின் ஊழியக்காரர்களுடைய வேஷத்தை தரித்துக்கொள்வார்கள். எப்படியென்று கேட்கிறீர்களா? இன்று அப்போஸ்தலர்கள் இருக்கிறார்களா? இல்லை. அப்படியென்றால் இன்று அபோஸ்தலர்கள் என்று சொல்லிக்கொண்டு வலம் வருகிறவர்கள் எப்படிப்பட்ட கள்ள அப்போஸ்தலர்கள்! இவர்களுடைய கிரியைகளை வைத்து அடையாளம் கண்டு கொள்ளலாம். எப்படியென்றால் வெளிப்படுத்தின விசேஷத்திலே சொல்லப்பட்ட எபேசு சபையாரைப்போல அவர்களை சோதித்தறிந்து பொய்யரைக் கண்டறியலாம். அப்போஸ்தலர் முதல் அதிகாரத்தின்படி அப்போஸ்தலன் என்றால் அவன் முதலாவது இயேசுகிறிஸ்து நாட்களில் இருந்திருக்கவேண்டும். மேலும் யோவான் ஞானஸ்நானம் கொடுத்த நாள் முதற் கொண்டு, கர்த்தராகிய இயேசுவானவர் உயர எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் கூட இருந்தவர்களில் ஒருவனாக இருக்க வேண்டும். இத் தகுதியம்சங்கள் இல்லாத ஒருவர் அப்போஸ்தலராக இருக்க முடியாது. இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும் சாத்தானும் அவனுடைய கூட்டத்தாரும் எப்படி வேஷம் போடுகிறார்கள் என்று. அப்படிப்பட்டவர்களை நாம் வேத வசனங்களைக் கொண்டு அவர்களுடைய கிரியைகளினால் அறிந்து கொள்ளலாம்.

***மனப்பாட வசனம்:***

*"ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்" (அப்போஸ்தலர்20:28;29).*

பாடம் - 7

# சபைக்குள் நுழைதல்
# ENTERING OF THE CHURCH

**J.C.Choate**

நமது படிப்பில் சபையின் முக்கியத்துவத்தை இதுவரையில் பார்த்தோம். கிறிஸ்து சபைக்காக மரித்தார் என்னும் வேத வசனங்களின் உபதேசம் இதற்கு ஆதாரமாக இருக்கிறது (எபே.5:25) என்பதையும், அவர் தமது சுய இரத்தத்தினாலே அதைக் கிரயத்திற்கு வாங்கினார் என்பதையும், (அப்.20:28) அவரே அதற்கு இரட்சகராயிருக்கிறார் என்பதையும் (எபே.5:23) அறிகிறோம். கீழ்வரும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

முக்கியமில்லாத ஒன்றிற்காகவா கிறிஸ்து மரித்தார்? உபயோகமற்ற சபைக்காகவா அவர் இரத்தம் சிந்தினார்? அதற்குப் புறம்பே ஒருவன் இரட்சிப்படைந்தால் அவரே அதற்கு இரட்சகராயிருக்க முடியுமா? இந்த ஒவ்வொரு கேள்விக்கும் இல்லை என்ற பதிலையே நீங்கள் சொல்லக்கூடும். அப்படியாயின், பின்னே ஏன் சபை முக்கியமில்லை என்றும், அதற்குள் அங்கமாகாமலேயே ஒருவன் இரட்சிக்கப்பட முடியும் என்றும் சொல்லப்படுகிறது? அப்படிப்பட்ட மக்கள் சபையைத் தவறாகப் புரிந்து கொண்டிருப்பதால் இப்படியாக வஞ்சிக்கப்பட்டிருக்கின்றனர்.

நிச்சயமாக சபை தான் இரட்சகர் என்று வேதாகமம் போதிப்பதில்லை. ஆனால் அதே நேரத்தில் ஒருவன் இரட்சிக்கப்பட சபைக்குள் இருக்க வேண்டும் என்று போதிக்கிறது. எப்படி நோவா காலத்து பேழை இரட்சகராயிராமல், நோவாவும் குடும்பமும் ஜலபிரளயத்திலிருந்து காக்கப்பட பேழைக்குள் இருக்க வேண்டியது அவசியமாயிருந்ததோ அது போலவேதான் சபையும். அப்படியாக மட்டுமிராமல், ஒருவன் இரட்சிக்கப்படும்போதும் கர்த்தர் அவரை சபையில் சேர்க்கிறார். பெந்தெகொஸ்தே நாளிலும் அதைத் தொடந்து வந்த நாட்களிலும் "இரட்சிக்கப் படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்" (அப்.2:47) என்று வசனம் கூறுகிறது. எனவே ஒருவன் இரட்சிக்கப்பட்டால் அவன்

கர்த்தருடைய சபையின் அங்கமாக இருக்கிறான். அவன் அங்கமாகாவிட்டால், அவன் இரட்சிக்கப்பட மாட்டான். இது எவ்வளவு எளிமையாய் புரிந்து கொள்ளத்தக்கது. இன்னொரு வார்த்தையில் சொன்னால், சபைக்கு புறம்பே இரட்சிப்பு என்று ஒன்று இல்லை. ஒரு நாமகரண கூட்டத்தில் அங்கம் வகிக்காமலும், மனிதர்களின் பிரிவுக்கூட்டங்களில் சேராமலும் இரட்சிக்கப்பட முடியும், அப்படியென்றால், அவன் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராகாமல் இரட்சிக்கப்பட இயலாது.

நாம் தொடர்ந்து படிக்கும்போது, ஒருவன் கர்த்தருடைய சபையில் சேர இயலாது. மாறாக இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் சபையில் சேர்க்கிறார். இரட்சிக்கப்பட்டவர்களை மாத்திரமே அவர் சபையில் சேர்ப்பதால், சபை என்பது இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டமைப்பாகும். ஒரு மனிதன் நேர்மையாக, உண்மையிலேயே கீழ்ப்படிகிறானா என்பதை உறுதிப்படுத்தத்தக்க வகையில் கர்த்தர் இருதயங்களையும், எண்ணங்களையும் பார்க்கிறார். அவன் உண்மையுள்ளவனாயிருப்பின், தேவன் அவனைச் சபையில் சேர்க்கிறார். அவன் உண்மையில்லாதவனாயின், பிறகு நாம் அவனை ஏற்றுக் கொண்டாலும், தேவனால் அவன் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை, ஏனெனில் அவன் புறத் தோற்றமான கீழ்ப்படிதலைக் காட்டுவதால் நாம் அவனின் இருதயத்தைக் காண இயலாது. ஒருவன் சபையிலே சேர்த்துக்கொள்ளப் படுவானாகில், எப்படிப்பட்ட எண்ண முள்ளவராயினும் பிறயாவரும் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். இதனால் தான் சபையின் சேர்க்கைக்கு கர்த்தரே பொறுப்பானவராயிருக்கிறார். இரட்சிக்கப்பட்டவர்களுக்குள் யார் இருக்கவேண்டும் என்பதையும், முறைப்படி யார் சபைக்குள் நுழைந்துள்ளனர் என்பதையும் தீர்மானிப்பதில் அவர் தவறு செய்வதில்லை.

கிறிஸ்துவே சபைக்கு இரட்சகராயிருப்பதாலும் அவரே இரட்சிக்கப்பட்டவர்களை சேர்க்கிறார் என்பதாலும் சபைக்குள் நுழைய ஒருவனிடத்தில் கர்த்தர் என்னத்தை எதிர் பார்க்கிறார் என்று ஒருவன் அறிய விரும்புவது இயற்கையே. இது தேவனுடைய வசனத்தில் தெளிவாக காட்டப்பட்டுள்ளது. விசேஷமாக, அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் உள்ள அநேக மனமாற்ற நிகழ்ச்சிகளில் இது தெளிவாக்கப் பட்டுள்ளது. ஆனால், கர்த்தருடைய சபையில் நுழைதலுக்கு ஏதுவான நிபந்தனைகள் அல்லது படிகளை குறிப்பாக

கவனிக்கவும்.

1. **ஒருவன் சத்தியத்தை கேட்க வேண்டும்.** "ஆதலால் விசுவாசம் கேள்வியினால் வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினால் வரும்" (ரோம.10:17)
2. **அவன் தேவன் மேலும் கிறிஸ்துவின் மேலும் விசுவாசம் வைக்க வேண்டும்.** "விசுவாசமில்லாமல் தேவனுக்குப்பிரியமாயிருப்பது கூடாத காரியம்: ஏனெனில் தேவனிடத்தில் சேருகிறவன் தேவன் ஒருவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலனளிக்கிறவர் என்றும் விசுவாசிக்க வேண்டும்" (எபி.11:6). கிறிஸ்து சொன்னார்: "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக, தேவனிடத்தில் விசுவாச மாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" (யோவா.14:1)..
3. **அவன் தமது பாவத்திலிருந்து மனந்திரும்பவேண்டும்.** "அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்" (லூக்.13:1).
4. **கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அவன் அறிக்கை செய்ய வேண்டும்.** கிறிஸ்து தாமே சொன்னார். "மனுஷருக்கு முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்" (மத்.10:32).
5. **அவன் தனது பாவ மன்னிப்பிற்காக ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும்.** ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுதல் (ரோம.6:3,4; அப்.8:26-39). "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்.16:16). "பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்பிற்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்றான்" (அப்.2:38).

இந்தப் பாடத்தில் மேலே எவைகளைக் கற்றுக் கொண்டோம்? இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் சபையிலே சேர்த்துக் கொள்கிறார் என்று கண்டோம். இதன்

பொருள் ஒருவன் கர்த்தருக்குக் கீழ்படிந்து இரட்சிக்கப் படும்போது, அவன் தானாகவே சபையிலே சேர்த்துக் கொள்ளப்படுகிறான். சத்தியத்தைக் கேட்டு, அதை விசுவாசித்து, பாவத்திலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பண்ணப்பட்டால் ஒருவன் இரட்சிக்கப்படுவான் என நாம் கண்டுகொண்டுள்ளோம். இப்படியாக, தனிப்பட்ட ஒவ்வொருவரும் செய்யும்போது அவன் சபையிலே சேர்த்துக் கொள்ளப்படுகிறான், இது ஒரு எளிமையானது அல்லவா?

இதை வேறுவகையில் சொல்ல வேண்டுமானால், ஜலத்தினாலும் ஆவியினாலுல் பிறப்பதன் மூலமே ஒருவன் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியும். ஆனால் ராஜ்யம் என்பது என்ன?. அதுவே சபை (மத்.18,19). சபையில் ஒருவன் நுழைய (அல்லது பிரவேசிக்க) கர்த்தர் இரண்டு விதமான வழிகளை வைத்துள்ளாரா? நிச்சயமாக இல்லை. ஆதலால், ஒருவன் விசுவாசித்து ஞானஸ்நானம் பெறும்போது, (வசனத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலம் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படும்போது). ஒருவன் கர்த்தருடைய சபையாகிய தேவனுடைய ராஜ்யம் அல்லது தேவனுடைய குடும்பத்திற்குள் பிறக்கிறான்.

மீண்டும் பவுல் கூறும்போது, நாம் எல்லாரும் ஒரே சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம் என்று கூறுகிறான் (1கொரி.12:13). ஆனால் சரீரம் என்பது என்ன? அதுதான் சபை (கொலே.1:18) எத்தனை (சரீரங்கள்) உள்ளன? ஒன்றே ஒன்று (எபே.44:4; 1:22,23). ஒருவன் எப்படி அதற்குள் நுழைய முடியும்? ஞானஸ்நானம் பண்ணப்படுவதன் மூலம், எனவே இரட்சிக்கப்படுவதற்கு, விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற வேண்டும், என்று கிறிஸ்து சொன்னார் (மாற்.16:16). அதை கொரிந்தியர்களும் செய்தனர் (அப்.18:8). ஆதலால் ஒருவன் சபைக்குள் ஞானஸ்நானம் பெறும்போது அவன் அதில் அங்கமாகிறான் அல்லது சேர்த்துக் கொள்ளப்படுகிறான்.

## கேள்விகள்

சரியான பதிலை எழுதவும்:

1. சபையைக்குறித்த நமது பாடத்தில் நாம் இதுவரை பார்த்தது என்ன? ------------------------------------------------
2. சபைக்காக மாரித்தது யார்? ------------------------------------
3. சபை எதைக்கொண்டு கிரயத்துக்கு வாங்கப்பட்டது?------
------------------------------------------------------------

4. சபைக்கு இரட்சகர் யார்? ------------------------------------------------
5. சபை முக்கியம் என்பதை நாம் எப்படி அறியக்கூடும்? -----
-------------------------------------------------------------------
6. சபை முக்கியமில்லை என்று சிலர் கூறக்காரணம் என்ன? -
-------------------------------------------------------------------
7. சபை இரட்சிக்கிறதா? -----------------------------------------------
8. ஒருவன் இரட்சிக்கப்பட வேண்டுமெனில் சபையில் அங்கத்தினராக வேண்டியது அவசியமா? ---------------------
9. வரவிருந்த ஜலபிரளயத்திலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள நோவாவும் அவன் குடும்பத்தாரும் எங்கே இருக்க வேண்டியிருந்தது? ---------------------------------
10. பேழைக்குப் புறம்பே அவர்களுக்கு (இரட்சிப்பு) பாதுகாப்பு இருந்ததா? ------------------------------------------
11. இரட்சிக்கப்பட்டவர்களை சபையில் சேர்த்துக் கொள்வது யார்? --------------------------------------------------
12. மேற்குறித்த காரியத்தைக் குறிப்பிடும் வசனத்தைக் குறிப்பிடுக? ----------------------------------------------------------
13. ஒருவன் இரட்சிக்கப்படும்போது, இயல்பாகவே அவன் எந்த சபையில் அங்கமாகிறான்? (அல்லது அங்கமாயிருக்க வேண்டும்) -------------------------------------------------------------
14. கர்த்தருடைய சபையில் ஒருவன் சேர்ந்து கொள்ள இயலுமா? -------------------------------------------------------------
15. சபைக்குள் பிரவேசிக்கத் தேவையான ஐந்து படிகள் யாவை? ---------------------------------------------------------------
16. மேலே குறித்த இந்தக் கற்பனைகளுக்குக் கீழ்ப் படியாமலேயே ஒருவன் இரட்சிக்கப்படக்கூடுமா? ----------
17. ஞானஸ்நானம் என்றால் என்ன? ------------------------------------
18. ஞானஸ்நானத்தின் நோக்கம் என்ன? ----------------------------
19. ராஜ்யம் என்பது என்ன? ------------------------------------------
20. ராஜ்த்திற்குள் பிரவேசிக்க ஏதுவான ஒரே வழி எது? -------
-------------------------------------------------------------------
21. சரீரம் என்பது என்ன? ---------------------------------------------
22. எத்தனை சரீரங்கள் உள்ளன? -----------------------------------
23. அதற்குள் ஒருவன் எப்படி பிரவேசிக்க இயலும்? ------------
-------------------------------------------------------------------
24. இரட்சிக்கப்பட எத்தனை படிகள் உள்ளன? -------------------
25. சபைக்குள் பிரவேசிக்கத் தேவையான எத்தனை வழிகள் உள்ளன? ----------------------------------------------------------

***-Selected***

## கால்

- ✦ என் **கால்** செம்மையான இடத்திலே நிற்கிறது; சபைகளிலே கர்த்தரைத் துதிப்பேன் - சங்26:12
- ✦ என் **கால்** சறுக்குகிறது என்று நான் சொல்லும்போது, கர்த்தாவே, உமது கிருபை என்னைத் தாங்குகிறது - சங்94:18
- ✦ கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து உன் **கால்** சிக்கிக்கொள்ளாதபடி காப்பார் - நீதி3:26
- ✦ வலது புறமாவது இடதுபுறமாவது சாயாதே; உன் **காலைத்** தீமைக்கு விலக்குவாயாக -நீதி4:27
- ✦ உன் அயலான் சலித்து உன்னை வெறுக்காதபடிக்கு, அடிக்கடி அவன் வீட்டில் **கால்** வைக்காதே - நீதி25:17
- ✦ ஆபத்துக்காலத்தில் துரோகியை நம்புவது உடைந்த பல்லுக்கும் மொழிபுரண்ட **காலுக்கும்** சமானம் - நீதி25:19
- ✦ நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் **நடையைக்** காத்துக் கொள் - பிர5:1
- ✦ என் பரிசுத்த நாளாகிய ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் **காலை** விலக்கி..... - ஏசா58:13
- ✦ பெருமைக்காரரின் **கால்** என்மேல் வராமலும், துன்மார்க்கருடைய கை என்னைப் பறக்கடியாமலும் இருப்பதாக - சங்36:11
- ✦ உன் **கால்** உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைத் தறித்துப்போடு - மாற்9:45

## வேத அறிவுப்போட்டி எண் 49-ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1.லீதியாள் | -அப்.16:14 | 6.மண்ணிலே,மண்ணுக்கு | -பிர.3:20 |
| 2.தியோத்திரேப்பு | -3யோவா.9 | 7.அந்நிய | -மல்.2:11 |
| 3.நகோமி | -ரூத்1:21 | 8.சமாதானத்தை | -எபே.2:17 |
| 4.ஏபால் | -யோசு.8:30 | 9.மறுஜென்மமுழுக்கினாலும் | -தீத்.3:5 |
| 5.ஆண்புணர்ச்சிக்காரனாயிருக்கக்கூடாது | -உபா.23:17 | 10.தன் மாம்சத்தை | -எபே.5:29 |

## வேத அறிவுப்போட்டி எண் 49-ல் வெற்றி பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| P.அலிஸ்மேரியம்மாள் | -வதிலை | G.கிரேஜ் ஜெயா | -வெ.குளம் |
| R.கலாவதிராஜா | -சத்திரபட்டி | J.S.நிர்மலா ஜான் | -மதுரை |
| S.ஆனந்த ராஜ் | -ஈரோடு | Mrs.எஸ்தர் சேகர் | -கோபி |
| குளோரி பௌவுல்சர் | -சென்னை | K.பிரஜிதா | -ஈரோடு |
| Dr.ஜெய்சிங் | -சென்னை | A.சேவியர் மேரி | -மதுரை |
| Mrs.ஜாஸ்மின்வின்செண்ட் | -மதுரை | T.முருகன் | -ஜே.பாளை |
| Mrs.வனிதா சாமுவேல் | -மதுரை | T.வேலுச்சாமி | -ஜே.பாளை |
| S.தண்டபாணி | -சிலுவத்தூர் | A.சிந்தியா | -கோவை |
| Mrs.லலிதாபிரேம்குமாரி | -மதுரை | V.கோவலன் | -மதுரை |
| G.P.ஏசையன் ராஜ் | -கோபி | S.ஜெயராணி | -கோவை |
| | | K.சாந்தி | -வாடிப்பட்டி |

# சந்திப்போம்! சிந்திப்போம்!

D.எபிநேசர்

**உரையாடல் - 26**

***தாவீது :*** *கட்டிடத்திற்கு தேவன் எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்னு இந்த வசனங்களைப் படிச்சு தெரிஞ்சுக்க (அப்7:47-50; அப்17:24).*

**யோனத்தான் :** *"சாலெமோனோ அவருக்கு ஆலயத்தைக் கட்டினான். ஆகிலும் உன்னதமானவர் கைகளினால் கட்டப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார்...... உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிற படியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை".*

***தாவீது :*** *மேலும், ஆகாய் தீர்க்கதரிசியைக் கொண்டு, "சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார். இந்த ஆலயத்தை மகிமையால் நிறையப்பண்ணுவேன். முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும்" என்று முன்னுரைக்கிறார். அந்த ஆலயம் எங்கே வரும் என்றும் ஏசாயா தீர்க்கதரிசியைக் கொண்டு முன்னுரைக்கிறார். (ஆகாய்2:6-9; ஏசாயா2:2,3). "கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடு முடியில் ஸ்தாபிக்கப்படும். சீயோனிலிருந்து வேதமும் எருசலேமிருந்து கர்த்தருடைய வசனமும் வெளிப்படும்".*

**யோனத்தான் :** *அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் அது அப்படியே நடந்தேறுகிறது அல்லவா?*

***தாவீது :*** *ஆமாம் யோனத்தான். ஆண்டவர் அறிவுறுத்தியபடி அப்போஸ்தலர்கள் காத்திருந்தார்கள். ஆண்டவரின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமில் கிறிஸ்துவின் சபையாக கர்த்தருடைய ஆலயம் எழும்புகிறது. இரட்சிக்கப்பட்டவர்கள் சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் (அப்2:41,47).*

**யோனத்தான் :** *இப்போது எனக்கு நன்றாகப் புரிகிறது தாவீது!*

இரட்சிக்கப்பட்ட மக்கள் தான் கர்த்தருடைய ஆலயம். கட்டிடத்திற்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. சரித்தானே!

**தாவீது :** சரிதான் யோனத்தான். பவுல் எபே.2:16-22-ல் இதை நன்றாக விளக்குகிறார். "அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்கிற அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள். அதற்கு இயேசு தாமே மூலைக்கல்லாக இருக்கிறார். அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர் மேல் நீங்களும் தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டு வருகிறீர்கள்.

**யோனத்தான் :** ஆஹா, அருமையான விளக்கம் தாவீது!

**தாவீது :** மேலும் இந்த வசனங்களையும் படி (மத்.18:20; யோவா.14:23; எபி.3:6; 1கொரி.3:16,17; 1பேது.2:4,5) இந்த வசனங்களின் மூலம் கிறிஸ்துவின் சபைதான் அந்த மகிமையுள்ள ஆலயம் என்பது தெளிவாக விளங்கும் (எபே.2:16; 3:9,10; 4:3,4,12,15; 5:25-27,32).

**யோனத்தான் :** மிக்க நன்றி தாவீது. நேரமாகிவிட்டது. நாம் நமது அன்பான வாசகர்களோடு ........

*-மீண்டும் சந்திப்போம்*

## கிறிஸ்துவின் வசன வாசகருக்கு கர்த்தர் செய்த இரட்டிப்பான ஆசீர்வாதம்

மிகவும் அன்பு நிறைந்த ஆசிரியர் உயர்திரு.B.அர்ஜுனன் அவர்களுக்கு சகோதரர் R.ஜான்சன் அந்தோனிராஜ் எழுதும் லட்டர். கடவுளின் பெரிதான கிருபையால் நலமுடன் நானும் எனது குடும்பத்தில் எல்லாரும் நலம். அதுபோல அங்கு தங்கள் நலம் மற்றும் எல்லாரும் கடவுளின் கிருபையால் இருப்பீர்கள் என நம்புகிறேன். மேலும் எனது சந்தா தொகை 50/-ரூ அனுப்பி உள்ளேன் எனது Ref.No.560 நான் அனுப்பியுள்ள சந்தாவை அன்புடன் பெற்று கொள்ளவும்.

நான் பல மாதங்கள் சந்தா பணம் அனுப்பவில்லை, எனக்கு பத்திரிக்கை அனுப்பி கடவுளின் ஆசீர்வாதத்தை பெற்று தந்தமைக்கு மிக்க நன்றி. தங்களின் இறைப்பணிகள் தொடரட்டும். நான் தங்களின் பத்திரிக்கையை மாதம்தோறும் படிக்கிறேன். மற்றவர்களுக்கும் படிக்க கொடுக்கிறேன். மிகவும் கடவுளின் கிருபையால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளேன். அரசுவேலை டிசம்பர்25-12-2003-ல் கிடைத்தது. 28-6-2004-ல் திருமணம் நடைபெற்றது. இந்தக்காரியம் தங்களுக்கு தெரிவிக்காமல் போனதற்கு வருந்துகிறேன். ஆயினும் நான் கிறிஸ்துவுக்குள் என்றும் சாட்சியா இருப்பேன்.

என்றும் அன்புடன்,
R.ஜான்சன் அந்தோணிராஜ்.

# ஒருவருடைய குழந்தைகளைப் பயிற்றுவிப்பதற்கும் நல்லொழுக்கப்படுத்துவதற்குமான தீர்மானமின்மை

# The Decision Not Train and Discipline one's Children

*-Betty Burton Choate*



இனங்களின் விருத்தி என்பது இயற்கையான ஒன்றும் உயிர்வாழ்வனவற்றின் முக்கியப் பகுதியாகவுமிருக்கிறது. இதைப் பற்றி சிறிது ஆராய்ந்து பேசுவது அவசியம். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவனால் கொடுக்கப்பட்ட முதல் கட்டளை, "நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்......" (ஆதி.1:28) என்பதாகும்.

ஜனங்கள் பிள்ளைகளைப் பெற்றிருக்கின்றனர். சில நேரங்களில் பெற்றோர்கள் இருவரும் கவனத்துடன் நிகழ்ச்சியின் நேரத்தைத் திட்டமிட்டு, எண்ணிக்கையுள்ள பிள்ளைகளுக்கு கொடுக்கவும், தங்கள் பிள்ளைகளின் சரீரம், மனவெழுச்சி, மற்றும் ஆவிக்குரிய தேவைகளில் கவனம் செலுத்தும்படிக்கும் அவர்கள் ஆயத்தம் செய்ய வேண்டுமெனவும் அறிந்திருக்கிறார்கள்.

ஆனால் பெற்றோர்களின் சார்பில் சம்பந்தமில்லாமலும் முன் எச்சரிக்கையில்லாமலும் உலகில் அடிக்கடி குழந்தைகள் பிறக்கின்றன. அவர்கள், சிறிதளவு பெற்றுக்கொண்டு பசியின் விளிம்பிலும் அல்லது கல்வி இல்லாமலும் வாழ்கின்றனர். மேலும், இவ்வுலகத்திலும்கூட அவர்கள் முன்னேற்றத்திற்கான தங்களுடைய விதியில் நம்பிக்கையற்றவர்களாக இருக்கின்றனர், வரப்போகிற ஆவிக்குரிய நித்திய உலகில் மிகக் குறைவாகவே காணப்படுவார்கள்.

**பெற்றோர்கள் உலகத்திற்குள் தாங்கள் கொண்டுவந்த உதவியற்ற சிறுபிள்ளைகளுக்கானப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவேண்டும்.** தீமோத்தேயு5:8, "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும்,

அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" என்க் கூறுகிறது.

ஆனால் பிள்ளைகளுடைய சரீரத் தேவைகளை மட்டும் பூர்த்திசெய்வதைக் காட்டிலும் பிள்ளைகளை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருவதில் அதிகமான பொறுப்புகள் இருக்கின்றன. தொடர்ச்சியான **போதனையும் பயிற்சியும்** அவசியம், ஞானத்துடனும் அன்புடனும் **உருவாக்கப் படவேண்டியதும்**, வயதான ஒருவருடைய தரிசனம். மேலும் குழந்தையாயிருக்கின்றவனை களிமண்ணிலிருந்து உருவாகின்ற ஒன்றைப் போலவுமிருக்க வேண்டி ஒன்றாகக் காட்டுகிறது.

நீதிமொழிகள் 22:6, "பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து, அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்" என வாக்களிக்கிறது.

ஆனால் இளம் பெற்றோர்கள் அதிகமாக அடிக்கடி குழந்தைகளைக் கட்டுப்படுத்துவதில்லை! குழந்தைகள் வடிவமைப்படுவதும், பயிற்றுவிக்கப்படுவதும் பெற்றோர்களால் தொடந்து முன்நோக்கி நடைபெற வேண்டியதாயிருக்கிறது, மேலும் அவர்கள் அவர்களை வளர்ச்சியடையப்பண்ணுவதில் ஒருபோதும் அமைதியாயிருக்கக் கூடாது. ஒருவேளை அவர்கள் என்ன செய்யவேண்டுமென உறுதியில்லாதவர்களாய் இருக்கலாம். ஒருவேளை அவர்கள் மிகவும் கடுமையாயிருப்பதில் அச்சம் கொள்ளலாம், தங்களுடைய இளங்குழந்தையை இழிவு படுத்துவதாகத் தோன்றலாம். **ஒருவேளை அவர்கள் அவன் இப்போது புரிந்து கொள்ளுவதற்கு மிகவும் சிறியவனாயிருக்கிறான், மேலும் அவன் பெரியவனாகும் போது எப்படி நடந்துகொள்ளவேண்டுமென அவனுக்கு தாங்கள் போதித்துக் கொள்ளலாம் என தவறான தீர்மானத்தை உருவாக்கினவர்களாய் இருக்கலாம்.**

இப்படிக் காத்திருப்பது பெற்றோரின் வேலையை மிக அதிகமாகக் கடினப்படுத்தும். ஒரு முரட்டாட்டம் பண்ணும், கூச்சலிடும், ஒழுங்கீனமான குழந்தை பெற்றோர்களுக்கு வெறுப்பூட்டுகிற குழந்தையாகயிருக்கும், வழக்கமாக பார்ப்பவர்களும் அவனுடைய நடத்தையை விரும்ப மாட்டார்கள். மற்றபெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகள் மேல் இவனுடைய செல்வாக்கிருப்பதைக்குறித்து தங்களுடைய குழந்தைகள் இந்த தொந்தரவுக்குள்ளாகி விடுவார்களென ஆத்திரமடையலாம். குழந்தை வளர்ந்து வருகையில், அவனுடைய நடவடிக்கை மோசமாகயிருந்தால் மற்றவர்கள் அவனோடிருக்க விரும்பமாட்டார்கள், அவன் அவர்களுடைய

மனநிலையை அறிந்து, அதனால் வேதனையடைவான், இருந்தபோதும் அவன் மற்றவர்கள் தன்னை ஒதுக்குவதற்கான காரணத்தைப்புரிந்து கொள்ளாமலிருக்கலாம். இது சின்ன தொந்தரவு கொடுக்கிறவனாக வளர்ந்து வருவதிலிருந்து தங்கள் பிள்ளைகளை காப்பாற்றுவது பெற்றோருடைய கடமையாக யிருக்கிறது. அந்த குழந்தை 'குற்றஞ்சாட்டப்பட்டு' புறக்கணிக்கப்பட்டவனாயிருந்தாலும், இது அவனை நேசிக்கப்படாத, அருவருப்பான ஒருவனாக வளர அனுமதித்த பெற்றோரையே சாரும்.

உங்களுடைய குழந்தையைப் பயிற்றுவிப்பதில் கண்டிப்பில்லாத பழக்கத்தைக் கொண்டிருந்தீர்களானால், உங்களுடைய **தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுங்கள்.** பெற்றோராக நீங்கள் செய்கின்ற வேலை **உங்கள் வாழ்வில் மிக முக்கியமானதாக இருக்கிறது!** இதை அற்பமாய் எண்ணாதீர்கள் அல்லது அதற்கு அதிகமான நாட்கள் உண்டு என நினைக்காதீர்கள். பல பாடங்களினூடே நீங்கள் உங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டியது ஒவ்வொரு நாளினுடைய மிகமுக்கியமான தேவையாகும். நீங்கள் மதிப்புமிகுந்த சின்ன ஆத்துமாவை உலகிற்கு ஆசீர்வாதமாயிருக்கும்படிக்கு வடிவமைப்பதற்கு குறைந்த வருடங்களையே பெற்றுள்ளீர்கள்.

நீங்கள் வருங்கால ஒரு தகப்பனை அல்லது ஒரு தாயைப் பயிற்றுவிக்கின்றீர்கள் என்பதை நினைக்க வேண்டும், மேலும் நீங்கள் உங்கள் குழந்தைகளைப் பயிற்றுவிக்கும் முறையே அவர்கள் தங்கள் குழந்தைகளைப் பயிற்றுவிப்பதற்கு அடித்தளமாயிருக்கும்.

இவைகள் உங்கள் மனதில் கொள்ள வேண்டிய பயிற்றுவிப்பதற்காக வழிமுறைகள்:

✦ வேண்டுகோளுக்கு உத்தரவு சொல்லும் முன் அல்லது ஆம் அல்லது இல்லை என சொல்லும் முன், **அதை நடைமுறைப்படுத்துவதற்கு** நீங்கள் செய்யப்போகிற காரியம் போதுமான அளவுக்கு முக்கியமானதாகயிருந்தால் நின்று நிதானியுங்கள்.

✦ ஆனால் நீங்கள் சிலவற்றைக்கூறினால், **அதை நடைமுறைக்குக் கொண்டுவாருங்கள்**. இதுவே உங்கள் குழந்தை **ஒழுக்கத்தின் பாதுகாப்பான எல்லைகளைக்** கற்றுக் கொள்ள ஏதுவான வழியாகும். நீங்கள் அவனுடைய வழிகாட்டி; மேலும் நீங்கள் உங்களுடைய பொறுப் பினைக்குறித்து ஆழ்ந்த யோசனையுள்ளவர்களாய் இருக்க

வேண்டும். அவன் உட்காரவோ அல்லது மௌனமாயிருக்கவோ தேவையில்லையென்றால், அதைச் செய்யும்படி சொல்லாதீர்கள். ஆனால் **நீங்கள் அதைச் செய்யும்படி சொன்னால், அதற்குக் கீழ்ப்படியாமலிருக்க அனுமதிக்காதீர்கள்.**

✦ கீழ்ப்படிதலுக்கு பாராட்டுதலோடு, அன்போடு, ஏற்றுக்கொள்ளுதலோடு **சன்மானம் கொடுங்கள்.** கீழ்ப்படியாமைக்கு வேறுபட்ட திருத்தலோடும் தண்டனையோடும் கைமாறுசெய்யுங்கள். அவைகள் இவ்விதமாக இருக்கலாம் **(1) வாய்மொழி திருத்தம் (2) சில உபகாரங்கள் அல்லது பொம்மை போன்றவற்றிற்கு மறுப்பு தெரிவித்தல் (3) அவன் கீழ்ப்படியத் தீர்மானிக்கும் வரை நாற்காலியில் அமரச்செய்தல் அல்லது தனியாக ஓரிடத்தில் நிற்கச்செய்தல் (4) கட்டுப்பாடோடே கையினால் அடித்தல் முறையில் சரீரப்பிரகாரமான தண்டனை அல்லது வேறு எந்தமுறையிலாவது உங்கள் குழந்தைகளைத் தண்டித்தல்.**

✦ உங்களுடைய குழந்தையின் "கொச்சையான" கோமாளித்தனங்ககளைப் பார்த்து சிரிக்காதீர்கள் அவைகள் உண்மையாகவே கீழ்ப்படியாமையான செயல்கள். அவைகள் சரிசெய்யப்படவேண்டியவை. பெற்றோர்களின் ஒரு சிறிய முன் எச்சரிக்கை பல ஆபத்துகளிலிருந்து தப்பித்துக்கொள்ள அவர்களுக்கு உதவும். ஒரு சிறுகுழந்தை தன்னைத் தூக்கி வைத்துக்கொண்டிருந்த பாட்டியின் முகத்தை அடித்துக் கொண்டேயிருந்த அந்த நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. அந்த முதியவள், அவள் ஒரு சின்ன குழந்தைதான் உண்மையாகவே அவள் தீங்கு செய்யவில்லை என அறிந்து கொண்டவளாய் சிரித்துக்கொண்டிருந்தாள். ஆனால் அந்தக் குழந்தையின் தகப்பன் வேகமாய் வந்து அக்குழந்தையின் கையைப்பிடித்து எந்த புன்முறுவலையும் காண்பிக்காது மிகவும் கண்டிப்பாக செய்யாதே எனக் கூறினார். மேலும அவர் " நான் சிரித்தால்" "அவள் இது ஒரு விளையாட்டு என நினைப்பாள்" மேலும் இது மற்றவர்களை அடிப்பது அவளுக்கு சரியான செயலாகத் தோன்றும். அந்தச் செயலில் அவள் வளருவதை நான் விரும்பவில்லை, மேலும் அவள் அதைச் செய்யாதபடிக்கு காலஞ்சென்ற பிறகு நான் போதிக்கிறவனாக இருக்கவிரும்பவில்லை என்று விளக்கினார். எப்பேர்பட்ட ஞானமுடைவர் அவர்!

✦ குழந்தைப் பருவத்திலிருந்தே ஒரு குழந்தையை ஆவிக்குரிய காரியத்திலும் தேவனோடு ஐக்கியங்கொள்ளவும்

பயிற்றுவிக்கத் தொடங்குங்ககள் நாள் முழுவதும் வாழ்வின் ஒவ்வொரு நாள் காரியங்களும் நமக்கு எல்லாவற்றையும் கொடுத்து வருகிற நம்முடைய அன்பின் தேவனுக்குரிய து. அவனுக்கு வேதவாக்கியங்களைக் கற்றுக்கொடுங்கள், அவன் வேதபாடவகுப்புகளில் ஒழுங்காகப் பங்கேற்கிறானா எனக் கவனியுங்கள். இதுவே அவன் தேவன் மேல் தன் வாழ்வை அஸ்திபாரமிட்டு வளர்ச்சியடைவதற்கு அவனுடைய நினைவில் நீங்கள் உருவாக்குகிற இயல்பான அடித்தளமாகும். நீங்கள் அவனுடைய இருதயத்தில் இந்த சத்தியங்களை நிலைநாட்ட கொஞ்ச காலத்தையே பெற்றிருக்கிறீர்கள், எனவே தேவன் அவன் எவ்விதமான புயலைச்சந்தித்தாலும் வாழ்நாள் முழுவதும் அவனுடைய அடைக்கலமாயிருக்கிறார்.

அடிக்கடி, ஒரு குழந்தையைப் பயிற்றுவிப்பதில், ஆவிக்குரிய மற்றும் சரீரப்பிரகாரமான உலகத்திற்கிடையில் குழப்பங்கள் இருக்கும். ஞாயிற்றுக் கிழமையில் கிரிக்கெட் போட்டி அல்லது ஆராதனைக்குச் செல்லுவதை தெரிந்துகொள்ளுவதா என்ற குழப்பம் ஏற்படலாம். சமீபத்தில் ஒரு இளைஞன் தான் குழந்தையாயிருந்த போது ஆராதனையைப் பற்றி தன்னுடைய தகப்பனுடைய கண்டிப்பினையும் அவர்கள் ஒருபோதும் கூட்டத்திற்குக் காலதாமதமாய் செல்லக்கூடாது என்பதற்காக அவர்கள் தீட்டிய காலை நேரத்திட்டத்தைக் குறித்தும் கூட தன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தான். இளைஞனாக, தன் விருப்பத்தின்படி தீர்மானங்களை உருவாக்குகின்றவனாக, "இப்போது என் தகப்பன் எனக்கு ஒரு ஆன்மீக உணர்வளிப்பவராக இருக்கிறார்" என்று சொன்னான்.

நீங்கள் உங்கள் குழந்தைக்கு ஒழுக்கமும், கவனமுள்ள போதனையும் இப்போதைக்கு தேவையில்லை எனத் தீர்மானித்திருப்பீர்களானால், தயவுசெய்து இக்காரியங்கள் **எல்லாவற்றையும் நன்கு யோசித்துப் பாருங்கள்**. "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்" (எபி.12:11).

### ஜெபியுங்கள்

- சபைகளில் இருக்கிற பிரிவினைகள் தகர்க்கப்பட.....
- தேவன் கொடுத்த மழைக்காக ஸ்தோத்திரம் செலுத்தி....
- இம் மாதம் நடைபெறவிருக்கும் 16வது வாசகர் கருத்தரங்கிற்காக.....

**பொருள்** : பரிசுத்தமுள்ள வாழ்க்கை வாழ்வதன் மூலம், தேவனிடம் நிச்சயத்தோடும், உண்மையோடும் திரும்புதல்.

**ஆக்கியோன்** : மல்கியா

**காலம்** : ஏறக்குறைய கி.மு.433-420

**திட்டவரைக் குறிப்பு** :

★ கர்த்தர் தம்முடைய சிநேகத்தை நீங்கள் சந்தேகிப்பதை விரும்பவில்லை 2 1:1-5

★ கர்த்தர் தம்முடைய ஆராதனையை நீங்கள் அசட்டைபண்ணுவதை விரும்பவில்லை 1:6-2:9

★ கர்த்தர் விவாக உடன்படிக்கையை அவமதிப்பது, தம்மை அவமதிப்பதாகச் சொல்லுகிறார் 2:10-16

★ கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பினை நீங்கள் சந்தேகிப்பதை விரும்பவில்லை 2:17-3:5

★ கர்த்தர் தம்முடைய தசமபாகத்தினை நீங்கள் கொள்ளையிடுவதை விரும்பவில்லை 3:6-12

★ கர்த்தர் தம்மை கனம்பண்ணுகிறதினால் வரப்போகிற பலனை நீங்கள் அறியும்படி விரும்புகிறார் 3:13-4:6

**சிறப்புச் செய்தி :**

"நீங்கள் உங்கள் பிதாக்களின் நாட்கள் தொடங்கி என் கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், அவைகளைவிட்டு விலகிப்போனீர்கள்; என்னிடத்திற்குத் திரும்புங்கள், அப்பொழுது உங்களிடத்திற்கு திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்"

**வரலாற்று பின்னணி :**

"தேவனுடைய மக்கள் தங்களுடைய மன உறுதியின்மை மற்றும் சோர்வின் காரணமாக அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது பயனற்றது என்று கூறி, முறுமுறுத்துக் கொண்டு அவர் கட்டளைகளைக் கைக் கொண்டனர். அவருடைய அன்பை சந்தேகித்தனர். மற்றும் தேவனுடைய மக்கள் மீண்டும் அவரிடம் திரும்பும்படி அவர்களுக்கு அழைப்பு விடுத்தல்.

## தெரிந்து கொள்ளுங்கள்

### கால்குலேட்டர்

கால்குலேட்டரை கண்டுபிடித்தவர் வில்லியம் சேவார்டு பாரப்ஸ் என்பவர் ஆவார். இவர் 1857 ஜூன் 28-ந்தேதி நியூயார்க்கில் பிறந்தார். அங்குள்ள தேசிய வங்கி ஒன்றில் கிளார்க்காக தனது வாழ்க்கையை தொடங்கினார். தனது உடல் நிலை சரியில்லாத காரணத்தால், அவர் 1882-ல் செயின்ட் லூயிஸ் பகுதிக்கு குடிபெயர்ந்தார். வங்கியில் சதவீதம், வட்டி, கூட்டல், பெருக்கல் என அன்றாடம் கணக்கிடுபவராக பணிபுரிந்ததுதான் அவரை கால்குலேட்டர் எனும் அரிய சாதனத்தை உருவாக்க மிகப்பெரிய தூண்டுகோலாக அமைந்தது.

# வேத அறிவுப் போட்டி எண் - 50

*போட்டியாளர்கள் கவனத்திற்கு,*

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25-தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். <u>உங்கள் பதிவு எண்ணுடன் முழு முகவரியை எழுதவும். விடைகளை ஆங்கிலத்தில் எழுதுபவர்களுடைய பெயர் நீக்கப்படும்.</u>*


1. கர்த்தருடைய நீதி எவைகள்போலவும், கர்த்தருடைய நியாயங்கள் எப்படியாகவும் இருக்கிறது?
2. நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
3. கீலேயாத்தியனான பர்சிலாயின் குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம் பண்ணி, ஆசாரிய ஊழியத்திற்கு விலக்கமானவர்கள் என்று எண்ணப்பட்டவர்கள் யார்?
4. பலிகளைப் புசிக்கிறவர்கள் எதனோடே ஐக்கியமாயிருக்கிறார்கள்?
5. யாருடைய தாய் இருநூறு வெள்ளிக்காசை எடுத்து, தட்டான் கையிலே கொடுத்தாள். அதினாலே தட்டான் எதைப் பண்ணினான்?
6. அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ள யாருக்குப்பிரியமாயிற்று?
7. தேவன் பட்சபாதம் பண்ணுகிறவரும் அல்ல, எது வாங்குகிறவரும் அல்ல?
8. ஒருவனையும் தூஷியாமலும், சண்டைபண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் எதை காண்பிக்க அவர்களுக்கு நினைப்பூட்ட வேண்டும்?
9. கர்த்தர் என்றைக்கும் சினம் வைக்கிற ஜனமென்றும் சொல்லப்படுபவர்கள் யார்?
10. மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவர் யார்?


## நடப்புச் செய்திகள்

- மத உணர்வை தூண்டினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று, அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் கமிஷன் எச்சரிக்கை விடுத்துள்ளது.
- உணவில் சேர்த்துக் கொள்ளப்படும் மஞ்சள் பொடிக்கு, புற்றுநோய் வராமல் தடுக்கும் சக்தி உள்ளது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.
- பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நடைபெற்ற மத்திய மந்திரிசபை கூட்டத்தில் தமிழை செம்மொழியாக அறிவிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.
- நம்நாடு கல்விப்பணிக்கான முதல் 'எடுகேட்' என்ற செயற்கைகோளை வான வெளியில் அனுப்பியுள்ளது.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali Street, Madurai-625 001. **Editor : B. Arjunan.**

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.



# HEAR THE VOICE OF TRUTH

ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 a.m<br>7.00 a.m | Box. 3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| TELUGU | Sun,Mon<br>Wed,Thu | 2.00 p.m<br>2.15 p.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Mon, Tue, Wed, Thu, Fri | 5.30 p.m<br>5.45 p.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m<br>4.00 p.m | Box. 5540<br>Trivandrum - 695 034 | P.K. VARGHESE |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2003-2005. Licensed to post without prepayment
License No. TN/WPP-25/SR/2003-2005. Posted at Batlagundu Post Office on 10th October 2004.

**Monthly Magazine**

To

From

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.